## இயல் 2 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி

காற்றே, வா
மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் உராய்ந்து, மிகுந்த
ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

காற்றே, வா.
எமது உயிர் – நெருப்பை நீடித்துநின்று நல்லொளி தருமாறு
நன்றாக வீசு.
சக்தி குறைந்துபோய், அதனை அவித்துவிடாதே.
பேய்போல வீசி அதனை மடித்துவிடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு.
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.

உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்.
உன்னை வழிபடுகின்றோம்.

**வினாக்கள்:**

1. இப்பாடலின் தலைப்பு யாது?
அ) உயிரே வா ஆ) காற்றே வா இ) அன்பே வா ஈ) மகிழ்ச்சியே வா

2. இப்பாடலை இயற்றியவர் யார்?
அ) கவிமணி தேசிய விநாயகம் ஆ) சுத்தானந்த பாரதியார்
இ) மகாகவி பாரதியார் ஈ) பாரதிதாசன்

3. லயத்துடன் – என்பதன் பொருள் யாது?
அ) சீரற்று ஆ) சீரிளமை இ) சீராக ஈ) மாறாக

4. எட்டயபுர எந்தல் ஆக அறியப்பட்டவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) இளங்கோவடிகள் இ) கம்பர் ஈ) பாரதியார்

5. பாரதியார் எழுதிய காவியங்களில் ஒன்று
அ) கண்ணன் பாட்டு ஆ) குயில் பாட்டு இ) பாப்பா பாட்டு ஈ) புதிய ஆத்திசூடி

6. பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்
அ) சுதேசமித்திரன் ஆ) குயில் பாட்டு இ) பாஞ்சாலி சபதம் ஈ) பாப்பா பட்டு

7. காற்று என்னும் தலைப்பில் அமைந்தது
அ) புதுக்கவிதை ஆ) வசன கவிதை இ) மரபுக்கவிதை ஈ) உரைநடை

8. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாக இருந்தது
அ) உரைநடை ஆ) வசன கவிதை இ) மரபுக்கவிதை ஈ) செய்யுள்

9. உணர்ச்சி பொங்கக் கவிதை படைக்க தடையாக இருப்பது
அ) அணி ஆ) உவமை இ) யாப்பு ஈ) உருவகம்

10. பாரதியாருக்கு பொருந்தாத ஒன்று
அ) நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா ஆ) சிந்துக்குத் தந்தை
இ) சந்தக்கவிமணி ஈ) பாட்டுக்கொரு புலவன்

நணந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை,
அருங்கடி மூதூர் மருங்கில் போகி.
யாழ்இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லோடு,
நாழி கொண்ட, நறுவீ முல்லை
அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,
பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய
கொடுங்கோற் கோவலர் பின்நின்றி உய்த்தர
இன்னே வருகுவர், தாயர்" என்போள்
நன்னர் நன்மொழி கேட்டனம்

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
அ] மதுரைக்காஞ்சி ஆ] முல்லைப்பாட்டு இ] குறிஞ்சிப்பாட்டு ஈ] கடற்கூத்து

2. இப்படாலை இயற்றியவர் யார்?
அ] நப்பூதனார் ஆ] கம்பர் இ] இளங்கோவடிகள் ஈ] நல்லந்துவனார்

3. முல்லைப்பாட்டு எப்பா வகையால் இயற்றப்பட்டது?
அ] வெண்பா ஆ] கலிப்பா இ] ஆசிரியப்பா ஈ] விருத்தப்பா

4. நேமி என்பதன் பொருள் யாது?
அ] இடம்புரி சங்கு ஆ] இடக்கை சங்கு இ] சங்கு ஈ] வலம்புரி சங்கு

5. மூதூர் - இலக்கணக் குறிப்புத் தருக.
அ] வினைத்தொகை ஆ] பண்புத்தொகை
இ] உவமைத்தொகை ஈ] உம்மைத்தொகை

6. கோடு - என்பதன் பொருள் யாது?
அ] மழை ஆ] மாலை இ] கொடு ஈ] கெடு

7. தடக்கை - இலக்கணக் குறிப்புத் தருக.
அ] உவமைத்தொடர் ஆ] உம்மைத்தொடர்
இ] உரிச்சொல் தொடர் ஈ] வேற்றுமைத்தொடர்

8. முல்லைப்பாட்டு இடம் பெற்றுள்ள தொகுப்பு
அ] எட்டுத்தொகை ஆ] பத்துப்பாட்டு இ] சிற்றிலக்கியம் ஈ] காப்பியம்

9. முல்லைத் திணைக்குரிய பெரும் பொழுது ................
அ] குளிர்காலம் ஆ] கோடை காலம் இ] கார்காலம் ஈ] முன்பனிக்காலம்

10. முல்லைத் திணைக்கு உரிய சிறுபொழுது ...............
அ] மாலை ஆ] எற்பாடு இ] காலை ஈ] நண்பகல்

11. முல்லைப்பாட்டின் மொத்த அடிகள் எத்தனை?
அ] 101 ஆ] 102 இ] 103 ஈ] 104

12. முல்லைப்பாட்டு எந்த நூல் வகையைச் சார்ந்தது?
அ] எட்டுத்தொகை ஆ] பத்துப்பாட்டு இ] கீழ்க்கணக்கு ஈ] சிற்றிலக்கியம்

13. முல்லைப்பாட்டு எந்த நூல்களுள் ஒன்று?
அ] பதினெண்மேல் கணக்கு ஆ] பதினெண்கீழ்க்கணக்கு
இ] சிற்றிலக்கியம் ஈ] காப்பியம்

14. வலம்புரிச் சங்கு பொறித்த கைகளையுடையவர்.
முருகன் ஆ] திருமால் இ] மாவலி மன்னன் ஈ] நான்முகன்

15. குறுகிய வடிவம் கொண்டு நீர்வரத்துத் தந்தவன்.
முருகன் ஆ] திருமால் இ] மாவலி மன்னன் ஈ] நான்முகன்

16. மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்து நின்றவர்
அ] முருகன் ஆ] திருமால் இ] மாவலிமன்னன் ஈ] நான்முகன்

17. 'கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி' - இவ்வடிகளில் மேகம் என்னும் பொருள்தரும்.
அ] கோடு ஆ] செலவு இ] எழிலி ஈ] கொடு

18. 'கொடுங்கோற் கோவலர்' - இதில் குறிப்பிடப்படும் கோவலர் யார்?
அ] கோவலன் ஆ] குறவர் இ] உழவர் ஈ] இடையர்

19. முல்லைப்பாட்டு என்னும் நூலை இயற்றியவர்
அ] கபிலர் ஆ] மாங்குடி மருதனார் இ] நப்பூதனார் ஈ] நக்கீரர்

20. 'நனந்தலை உலகம்' என்பதில் 'நனந்தலை' என்பதன் பொருள்
அ] கவர்ந்த ஆ] அகன்ற இ] சுருங்கிய ஈ] இழந்த

21. 'நறுவீ' என்பதில் 'வீ' என்பதன் பொருள்
அ] மலர்கள் ஆ] மான்கள் இ] விண்மீன்கள் ஈ] கண்கள்

22. தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றவர்கள்
அ] இளம் பெண்கள் ஆ] முதுபெண்டிர்
இ] தோழிகள் ஈ] சான்றோர்கள்

23. சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட பசியால் வாடிக் கொண்டிருந்தது எது?
அ] பசு ஆ] இளங்கன்று இ] எருமை ஈ] ஆடு

24. பசியால் வாடிக் கொண்டிருந்த இளங்கன்றின் வருத்தத்தைக் கண்டவள்
அ] செவிலித்தாய் ஆ] இடைமகள் இ] தலைவி ஈ] தோழி

25. 'கைய கொடுங்கோற் கோவலர் பின் நின்று உய்த்தர இன்னே வருகுவர், தாயர்' என்று யார் எதனிடம் கூறியது?
அ] இடைமகள் இளங்கன்றிடம் ஆ] முதுபெண்டிர் பசுவிடம்
இ] தலைவன் தலைவியிடம் ஈ] தலைவி மேகத்திடம்

26. 'நன்னர் நன்மொழி கேட்டனம்' - யார் யாரிடம் கூறியது?
அ] முதுபெண்கள் தலைவியிடம் கூறியது ஆ] தலைவி முதுபெண்களிடம் கூறியது
இ] தோழி தலைவியிடம் கூறியது ஈ] தலைவி தலைவனிடம் கூறியது

27. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள முல்லைப்பாட்டின் அடிகள்
அ] 1 - 17 ஆ] 17 - 25 இ] 4 -16 ஈ] 5 - 20